Registered as Newspaper at the G. P. O. Under No. Q. B. 8935 78

# மனிதன்

மனிதன்
அஞ்சல்பெட்டி
எண் 81
யாழ்ப்பாணம்

விலை சதம் 50

| ஆத்மா 3 | இராகம் 3–6 | செப். – டிசம். 1979 | பக்கங்கள் 10 |
|---|---|---|---|

## விலங்குகள் நொறுங்கட்டும்!

1948-ம் ஆண்டு டிசம்பர் 10-ந் திகதி ஐக்கிய நாடுகள் தாபனம் மனித உரிமைகள் சர்வதேசப் பிரகடனத்தை ஏற்று சாற்றியது இப்பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1979-ம் ஆண்டு டிசம்பர் 10-ந் திகதியோடு 30 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன, இந்த நிறைவு விழா உலக நாடுகளில் எல்லாம் நினைவு கூரப்படுவதோடு அன்றைய நாள் மனித உரிமைகள் தினமாகவும் நினைவு கூரப்பட்டு வருகின்றது. இப் பிரகடனமானது உலக வரலாற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்ததொன்றாகும், ஏனெனில் வரலாற்றிலேயே முதன் முறையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், பின் பற்றவும் சர்வதேச சமுதாயம் பொறுப்பேற்றதுடன் அவ்வாறு பொறுப்பேற்பது ஒரு கடமை எனவும் ஏற்றுக் கொண்டது

இச்சர்வதேசப் பிரகடனம் குடிசார், அரசியல் உரிமைகள் பொருளாதார சமூகப் பண்பாட்டு உரிமைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய முப்பது வாசகங்களைக் கொண்டுள்ளது. 1-ம், 2-ம், வாசகங்கள் பொதுவாசகங்களாகும், இவை "மனிதர் யாவரும் விடுதலையுடன் பிறந்தவர்களாயும் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்களாயுமுளர்" எனவும் இப்பிரகடனத்திற் காட்டப்பட்டுள்ள உரிமைகள், விடுதலைகள் யாவற்றுக்கும் இனம் பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு கருத்து தேசிய அல்லது சமூகப் பிறப்பிடம், சொத்து, பிறப்பு அல்லது வேறு மதிப்புநிலை ஆகியனபோன்ற எத்தகைய வித்தியாசமுமின்றி உரித்துடையவராவர் எனக் கூறுகின்றது.

இப்பிரகடனத்தில் 3—21 வரையான வாசகங்களுள் ஒப்புக்கொள்ளப்பட்ட குடிசார், அரசியல் உரிமைகளில் பின் வருவன அடங்கும். ஆளின் உயிர் விடுதலை பாதுகாப்பு ஆகியவற்றிற்குரிமை, அடிமை நிலை அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து விடுதலை சித்திரவதையிலிருந்து அல்லது கொடிய மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுபடுத்தும் முறையில் நடத்துவதிலிருந்து, அல்லது தண்டனையிலிருந்து விடுதலை; சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுதல் இவை போன்ற இன்னோரன்ன உரிமைகளும் அடங்குகின்றன.

22—27 வரையிலான வாசகங்கள் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள்; சமூகபாதுகாப்பு உரிமை! வேலை செய்யும் உரிமை; இளைப்பாறவும் ஓய்வெடுக்கவும் உரிமை; சுகாதாரத்திற்கும், நல்வாழ்விற்கும், போதிய வாழ்க்கைத்தரத்திற்கும் உரிமை; கல்வி கற்கும் உரிமை சமூதாயத்தின் பண்பாட்டு வாழ்வில் பங்குபற்றும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன, 28—30 வரையிலான வாசகங்கள் இந்த உரிமைகளையும் விடுதலைகளையும் முழுமையாகப் பெற உதவக்கூடிய ஒரு சமூக சர்வதேச ஒழுங்கு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையார் என்பதனை ஒப்புக்கொள்கின்றன, அத்துடன் தனிப்பட்ட ஒருவருக்குச் சமூதாயத்துடனுள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் அவை வலியுறுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் அடக்கியதாகவே காணப்படும் ஐ, நா. தாபனத்தின் மனித உரிமைப் பிரகடனமானது உண்மையில் உலகம் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சனைகளுக்குப் பயனுறு முறையில் ஈடுகொடுக்கும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ளது, ஆனால் யுத்த நாசத்திலிருந்து எதிர்வரும் பரம்பரையினரைக் காப்பதும் அடிப்படை மனித உரிமைகள் மீது நம்பிக்கை வைப்பதை மீண்டும் உறுதிப்படுத்தலும், நீதியை நிலைநாட்டலும், சர்வதேச சட்டத்தின் மீது மதிப்பு வைத்தலும் சமூக நல அபிவிருத்தியையும் சகலருக்கும் உயர்ந்ததரமான வாழ்க்கையினை ஏற்படுத்த வழிவகுத்தலும் போன்ற உலக நிறுவனத்தின் இலட்சியங்கள் இன்னும் நிறைவேறவில்லை, எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்ட போதிலும் இந்த நோக்கங்கள் இன்னும் நிறைவுறாமலே இருக்கின்றன.

காரணம் மனித உரிமைகளை மறுக்காத நாடு என ஏந்தவொரு நாட்டையும் சுட்டிக்காட்ட முடியாது. மனித உரிமைகள் மீதான மீறுதல்கள் இன்று நாடுகள் தோறும் மலிந்து காணப்படுகின்றன. எனவே ஐ, நா. தாபனம் போன்ற உலக நிறுவனங்களின் இலட்சியம் முழுமைபெற வேண்டுமானால் மனித உரிமைகளுக்கான போராட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படவேண்டும். இப்போராட்டத்தின்போது நாம் கடந்து செல்லவேண்டிய பாதை நீண்டதாகவே காணப்படுகின்றது. எனவே மனித உரிமைகள் தினத்தை நினைவு கூறுகின்ற இந்த நாளிலே 'மனித உரிமைகள்' பற்றிப் புரட்சிக்குரல் எழுப்புவதோடு மட்டும் நின்று விடாது அதற்கான போராட்டங்களில் முன்னின்று உழைக்க இன்றே புறப்படுவோமாக.

★ தமிழ் ஈழ சமூக பொருளாதாரச் சிந்தனை இதழ் ★

"ஆசிரியர்"

"மனிதன்"

# மனித உரிமைகள் மீதான மீறுதல்கள்

மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளை உலக மன்றமான ஐ. நா. சபை அகல் விரிவாகப் பிரகடனப் படுத்தியுள்ள பொழுதிலும், ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட உரிமைகளை அங்கீகரித்திருப்பதாகவும், ஏற்றுத் தத்தம் நாடுகளில் அமுல் நடத்தி வருவதாகப் பெருமை பேசி வருகின்றபொழுதிலும் கூட, "எந்தவொரு நாடும் மனித உரிமைகளைப் பொறுத்தமட்டில் குறைபாடு இல்லாது நிறைவு பெற்றதாக இல்லை என்பது வெளிப்படையானது. வெளிப்படையாக சர்வாதிகார நாடொன்று கூற முடியாவிட்டாலும், அநேகமான நாடுகளில் அரசாங்கங்களா மேலாண்மையுடையன என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது புதினப் பத்திரிகைகள் யாவும் ஒன்றில் மூகாமைப் படுத்தப்பட்டுள்ளது அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; அரசியல் கட்சிகளோ ஒன்றில் பேடிகளாக மாற்றப்படுகின்றன, சட்ட விரோதமானவையெனத் தடை செய்யப்படுகின்றன. தேர்தல்களில் கூட பெரும் மோசடிகள் நிகழ்கின்றன. இங்கு விளக்கும் இயல்பு பெருதவரைக்கு மட்டிலுமே மாறுபட்ட கருத்துக்கள் சகித்துக் கொள்ளப்படுகின்றன.

அநேகமான நாடுகளில் ஒரு தலைமுடிவாகவே மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். நீண்ட காலம் மனிதத் தன்மைக்கு மாறான நிலைவரங்களில் நீதிவிசாரணை எதுவுமின்றி தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படுகின்றனர்: கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். உத்தியோக பூர்வமான அங்கீகாரத்துடன் உத்தியோகப்பற்ற மரண தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர்; என்று இலங்கையில் இடம் பெற்ற சட்ட ஆசிய மாநாட்டில் உரை நிகழ்த்துகையில், பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் நீதியமைச்சரும், சட்டத்துறைப் பேராசிரியரும், முன்னாள் மேலவை உறுப்பினருமாகிய திரு: யொஸ் தியோக்னோ குறிப்பிட்டிருக்கிறார். இத் தினசரிகளில் இடம் பெருத அவரது பேச்சு 'லங்கா காடியன்" பத்திரிகையில் மட்டும் பிரத்தியேகமாக வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் யொஸ் தியொக்னோ குறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் மீதான மீறுதல்கள் யாவும், மேற்படி சட்ட ஆசிய மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களின் நாடுகளிலேயே இடம்பெற்று வருவதாக ஊகிக்க இடமுண்டு.

அநேக நாடுகளில் தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள், மாணவர் சங்கங்கள், நகர அறிஞர் சங்கங்கள், நசுக்கப்படுகின்றன; அவற்றின் தலைவர்கள் வேட்டையாடப்படுகின்றனர். அல்லது சிறையில் அடைக்கப்படுகின்றனர். குற்றச் செயல்களுக்காகப் பெண்கள் சுரண்டப்படுகின்றனர். சர்வதேச முதலீடுகளுக்காக முதலீடுகளைக் கவருவதற்காக கூலி குறைக்கப்படுகிறது; அறிஞர்களின் சிந்தனைச் சுதந்திரத்துக்கு பாரதூரமான கேடு சூழப்படுகிறது. இராணுவ நடவடிக்கைகளுக்காக அல்லது பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்காக முழுச் சமுதாயங்களே வேருடன் பெயர்க்கப்படுகின்றன; கோடிக்கணக்கான பணம் இராணுவத்திலும், உல்லாச பயணத்துறைக்காகவும் மற்றும் வர்த்தகத்துக்காகவும் செலவிடப்படுகின்ற நேரத்தில் மக்களில் பெரும்பாலோருக்கு வீடில்லை. அல்லது புறாக்கூடுகள் போன்ற லயன் வீடுகளில் மந்தைகள் போல் அடைத்து வாழவிடப்படுவர். உண்ண உணவில்லாது பஞ்சத்தில் தவிப்பார்கள்; நோயினால் பீடிக்கப்பட்டிருப்பர். கரிசனையற்றதாகவிருக்கும் அவர்களது வாழ்க்கை.

இத்தகைய கொடூரங்கள் இலங்கைத் தீவில் எந்தக் காலத்திலும் நிகழாது தடுப்பதற்கு பொது மக்கள் சதா விழிப்புடன் இருக்கவேண்டும்; அந்த வகையில், மனித உரிமைகள் பால் அவர்களுக்கு நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். சம்பவிக்கும் மனித உரிமை மீறுதல்களையிட்ட ஏனோதானோ என்ற அசிரத்தையான மனப்போக்கு நீக்க வேண்டும்; இன்று அயலவருக்கு நடப்பது நாளை எவருக்கும் சம்பவிக்கலாம் ஏன் எனக்கே நடக்கலாம் என்ற உணர்வு நம் ஒவ்வொருவரிடமும் ஏற்படவேண்டும்.

அத்தகைய உணர்வு நிலையைத் தோற்றுவிப்பதற்கும், மனித உரிமை மீறுதல்களை நிகழவிடாது காக்கும் மனப் பக்குவ நிலையைத் தோற்றுவிப்பதற்கும், மனித உரிமைகள் பற்றி நன்கு பிரச்சாரம் செய்யப்படல் வேண்டும். மனித உரிமைகள் இயல்பாக வருவன. எனவே அவை மனிதனின் பிறப்புரிமைகள், அவற்றை அனுபவிப்பதும் ஏனையோரும் அனுபவிக்கச் செய்வதும் வெறும் கடமை மட்டுமல்ல. அது ஒரு நிர்ப்பந்தமும் கூட. கடமையில் இருந்து தப்பலாம், கடமையை அசட்டை செய்யலாம், நிர்ப்பந்தத்தில் இருந்து விடுபட வழியில்லை, ஆகவே மனித உரிமைகள் நிலைபெற வேண்டுவது முடிந்த முடிவாகும். இப்போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு நம் ஒவ்வொருவருக்கும் இறைவன் நல்ல பக்குவப்பட்ட மன நிலையைத் தரவேண்டும். எதிர்வரும் மார்கழித் திங்களில் வரும் "மனித உரிமைகள் தினம்" அதற்குப் பயன்படுமா!

அதன் நிமித்தம் அந் நாளில் உலகம் பூராவும் மேற்கொள்ளப்படும் பணிகள், பிரச்சாரங்கள் பூரண பயன் தருமாக. ★

— இன்பரசு.

# ஈழ நங்கையே, விழித்தெழு! விழித்தெழு!!

— கார்த்திகா —

அரசியல், சமூக, பொருளாதார கலாச்சார ரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும் வாழ்கின்ற மனிதர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் மனித உரிமைகளுக்காகப் போராடும் ஆண்களும் பெண்களும், குழந்தைகளுமான ஒருமக்கள் கூட்டத்தின் எழுச்சியையும் அதன் தொடர்பான புரட்சியையும் நாம் எதிர்நோக்கத்தான் வேண்டும்.

இலங்கையில் மட்டுமல்ல சோசலிச, நாடுகளைத்தவிர மற்றெல்லா நாடுகளிலும் பெண் என்பவள் ஆணைவிட வித்தியாசமானவள் என்று கொள்ளப்பட்டு அவள் ஒரு ஆணைப்போல் இல்லாமல், இரண்டாம் தரப் பிரஜையாக மதிக்கப்பட்டு வித்தியாசமாக நடத்தப்படுகிறாள். இதனால் அவள் அடுக்களை வேலைக்கும் படுக்கையறைத் தேவைக்கும் பயன்படுத்தப்படும் நோக்கத்திலேயேவளர்க்கப்படுகிறாள். 'நானும் சுயகௌரவத்தோடு சுதந்திரமாக வாழப்பிறந்தவள்தான்' என்ற உண்மையை உணர்ந்து உரிமைக் குரலெழுப்பத்தேவையான சுயசிந்தனையற்றிருப்பதே இத்தகைய மந்த நிலைக்குக்காரணமாகும். இருக்கின்ற சில கல்வி அறிவு பெற்ற மாதர்கள் கூட 'மாதர் சங்கம்' என்ற பெயரிற் கூடி தையலையும் சமையலையும் கற்றுக்கொண்டு ஊர்வம்புகளையும் புரட்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் எமது தீவில் 70% பெண்கள் கல்வி அறிவு பெற்றவர்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

"அப்பன் உப்புக்கிணற்றைத் தோண்டிவிட்டான்
அதனால்
பிள்ளை உப்புத்தண்ணியைக் குடித்துக் கொண்டிருக்கிறான்"

என்ற பழமொழிதான் இன்றைய சமூகத்தின் போக்கைப் பார்க்கும் போது எனக்கு ஞாபகம் வருகிறது. வழிவழியாக வந்த சமூதாய மரபுகளை எந்தவிதமான காரணமுமின்றி முட்டாள்தனமாகப் பின்பற்றும் பெற்றோரும், அதற்காகவே பிறந்ததாக எண்ணும் பெண்களும் வாழ்க்கையின் நோக்கத்தைப்பற்றிய சிந்தனையோ, தெளிவோ இன்றிப் பின்பற்றுவது வேதனைக்குரியதாகும். பெண்பிறப்பதே திருமணம் செய்து பிள்ளை பெறுவதற்குத்தான் என்ற அபிப்பிராயத்தோடு வளர்க்கும் பெற்றோரும், சமைப்பதற்கும், சுகபோகத்துக்குமே எமக்கு மனைவி தேவைப்படுகிறது என்று ஆண்களும் வளர்ந்து தங்கநகைபோட்டுச் சேலை உடுத்தி, தையலும் சமையலும் கற்றுக்கொண்டு கலியாணம் செய்தால் சரி என்று பெண்களும் நினைப்பதுதான் இன்றும் பெண்களின் அடிமைத்தனம் தொடர்வதற்குக் காரணமாகும்.

தான் வாழும் சூழலின் நடைமுறைகளால் தான் எவ்வாறு பாதிக்கப்படுகிறோம் என்றோ, தன்னுடைய செய்கைகள் எவ்வாறு மற்றவர்களைப் பாதிக்கிறது என்றோ சிந்திக்காமல் எழுந்தமானமாக வாழ்வதும், எப்படியாவது வாழ்ந்தால் சரி என்ற மூன்றாந்தரமான போக்கும் உடைய ஒரு மனிதனுக்கு மனித உரிமையைப்பற்றிச் சிந்திக்கும் அறிவியல் ரீதியான தாக்கம் ஏற்படும் என்பது சொல்ல முடியாதுதான். விதவைகள் மறுமணத்தையும் பெண்களின் உத்தியோகத்தையும் வெறுக்கும் மக்கள் இன்றும் இருக்கிறார்கள்தான். அதற்காக அவைகளை ஆதரிக்க வேண்டுமா? வழி சரியில்லை என்று தெரிந்தபின்னும் ஓடிக்கொண்டே இருப்பவர்களைப்பற்றி நாமென்ன சொல்வது? எந்த ஒரு சமூதாயத்திலும் அலுப்படைந்த மக்களிடையே உழைப்பும், நம்பிக்கையும், ஊக்கமுமுடைய சில யதார்த்த ரீதியான பொதுவுடமைவாதிகளின் முற்போக்குக் கருத்துக்கள்தான் பலரது எதிர்ப்புக்களை மீறி மக்களை வழிநடத்திச் சென்றிருக்கிறது என்ற உண்மையை நாம் இங்கு கருத்திற் கொள்வோம். அந்தவகையில் சுதந்திரத்தைப் பற்றிய நினைவையே உணராத பெண்களுக்கும் பெண்கள் இன்றைய சமூதாயத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை உணரவைப்பது முக்கியமாகும்.

★ பெண்களுக்கு இருக்கும் அழகைப் பயன்படுத்தி அதைவிளம்பரப் பொருளாக்கி வர்த்தகம் என்ற பெயரில் பெண்களை அரைகுறை ஆடைகளுடன் பத்திரிகைகளிலும், சினிமாக்களிலும் பயன்படுத்திப் பெண்மையின் கௌரவத்தைக் கேலிக்குரிய தாக்குகிறார்கள் [சுதந்திர வர்த்தகத்தில் பெண்களைப் பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடு விதித்தல்].

★ ஒரு பெண்ணைக் காதலிக்க முடிகின்ற ஆண்களுக்கு அவர்களை மனைவியாக்கிக் கொள்வதற்கு மட்டும் சீதனம் என்றபெயரில் செய்யப்படும் கொடுமையால் பல பெண்கள் திருமணம் செய்யாமலே இருக்கின்ற நிலைமை. [சீதன முறையைச் சட்டம் மூலம் ஒழித்து நடைமுறைப் படுத்த வேண்டும்].

★ படிப்பதற்குத் திறமையிருந்தும், விருப்பமிருந்தும் போதிய வருவாயற்ற பெற்றோருக்கு உதவிசெய்ய வேலைக்குப் போகவேண்டி ஏற்படுவதால் சிறுவயதிலேயே கல்விக்கு முழுக்குப்போடும் நிலை ஏற்படுகிறது. [ஆண்களாயினும் பெண்களாயினும் எட்டாம் வகுப்புவரையாவது கட்டாயக்கல்விகற்கச் சட்டமியற்ற வேண்டும்.]

★ வேலைக்குச் சேர்க்கப்பட்டுப் பெண்கள் என்ற காரணத்தினால் மற்றவர்களைவிடக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறார்கள். [எல்லாருக்கும், என்ன வேலையாயினும் சமசம்பளம் கொடுக்கப்படவேண்டும்.]

★ வேலைக்குப் போகும் பெண்களுக்கு பிரசவகால விடுமுறையில் அவர்கள் வசதிக்கு ஏற்றவகையில் விடுமுறை எடுக்க சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் அவர்கள் வேலைக்குப் போகத் தொடங்கும் காலங்களில் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகக் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்தவேண்டும்.

→ 5

# மனித உரிமைகளுக்கான போராட்டம்:

இற்றைக்கு ஏறக்குறைய 1·5 பில்லியன் (Billion) வருடங்களுக்கு முன்பே மனித இனம் தோன்றி விட்டதாக விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற சான்றுகளைக்கொண்டு அறிய முடிகின்றது. இது எவ்வாறாயினும் மனிதன் தோன்றிய காலந்தொட்டே மனித உரிமைகளுக்கான போராட்டங்களை நடாத்தி வந்திருக்கின்றான் என்பதற்கு வரலாற்று ரீதியான சான்றுகள் நிறைய உண்டு. அதாவது ஒவ்வொரு நாகரீகங்களின் தோற்றங்களும் இந்த உரிமைகளை ஈன்றெடுக்க மனிதனால் மேற்கொள்ளப் ஆரம்ப முயற்சிகளே என்று கூறலாம்.

என்றாலும் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பகுத்தறிவுக் கோட்பாட்டின் (Rationalisom) பின்னணியில் தான் மனித உரிமைகள் பற்றி கருத்துத்தெளிவும், சிந்தனையும் பிறந்ததெனலாம். இச்சிந்தனைகளை நடைமுறைப் படுத்துகின்ற இபருமுயற்சியாக 1789-ல் நடைபெற்ற பிரான்சியப் புரட்சியைக் குறிப்பிடலாம். விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற முற்போக்குக் கருத்துக்களை முன்வைத்து மனிதாபிமானமற்ற செயல்களுக்கு எதிராக மனித உரிமைகளைப்பாதுகாக்கும் நோக்குடனேயே இப்புரட்சி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறாக வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்ப்போமானால் அங்கு காணக்கிடப்பது என்ன? மனித சக்திகள் அடக்கப்பட்டும், உரிமைகள் பறிக்கப்பட்டும் நசுக்கப்பட்ட நிலையில் ஒரு கூட்டம் மக்களினால் [உரிமைகளைப் பெற்றெடுக்க] எழுப்பப்படும் புரட்சிக் குரல்களும், முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற போராட்டங்களுமே இப்போராட்டமானது வெறும் புரட்சிகளோடு மட்டும் நின்றுவிடாது தொடர்ந்தும் மக்களால் நடத்தப்படுகின்ற முடிவில்லாத போராட்டமாகவே இன்றுவரையும் காணப்படுகின்றது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் உச்சக்கட்டத்தை அடைந்து விட்ட இந்த இருபதாம் நூற்றாண்டிலே நாஸ்திகவாதத்திற்குப் பஞ்சமேயில்லை. விஞ்ஞான வளர்ச்சியினாலும், வெறும் நாஸ்திக வாதத்தினாலும் பூரண மனித விடுதலை பிறக்குமென்ற கருத்தினை இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலே நியட்சே [Nietchey] போன்றோர் முன்வைத்தனர். இவர்களால் கட்டி எழுப்பப்பட்ட இக்கனவு இந்நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டு உலக மகாயுத்தங்களின்போது முற்றாகவே கலைந்துவிட்டதென்றுதான் கூறவேண்டும். 2-ம் உலக மகாயுத்த காலத்தில் குறிப்பாக 'ஜேர்மனியில் ஹிட்லரின் அட்டூழியங்கள் அதன் காரணமாக ஏற்பட்ட எழுத்தில் வடிக்க முடியாத உயிர், பொருட்சேதங்கள் கனவுலகவாதிகளைக் கண்விழிக்க வைத்து விட்டது. இவ்வாறாக இந்நூற்றாண்டில் ஏற்பட்ட இரு பெருயுத்தங்களும் உலக நாடுகளிலெல்லாம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியதோடு விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியதெனலாம்' அதாவது மனித உரிமைகள் மதிப்புக்குரியவை, அவர்கள் சுதந்திரமாகப் பிறந்தவர்கள், சுதந்திரமாக வாழ அவர்களுக்கு உரிமையுண்டு, எனவே மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு அவை பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் ஒவ்வொரு நாடுகளும் உணர்ந்துகொண்டன;

இவ்வாறான கருத்துணர்வின் பின்னணியில் எழுந்ததே மனித உரிமைகள்பற்றிய உலகப் பிரகடனம், இது ஐக்கிய நாடுகள் சபையினால் 1948-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ம் திகதி வெளியிடப்பட்டது' இப்பிரகடனம் வெளியிடப்பட்டு இம்மாதம் (1979 டிசம்பர்) 10-ம் திகதியுடன் 30 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன, ஐ. நாடு சபையினால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் குடிசார் அரசியல் உரிமைகள், பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள், ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய 30 வாசகங்களைக் கொண்டுள்ளது. முதல் இரண்டு வாசகங்களும் சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை, அவன் உரிமையிலும் மதிப்பிலும் சமமானவன் என்பனபோன்ற கருத்துக்களை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளது. இந்த இரண்டு வாசகங்களையும் அடிப்படையாக வைத்து எழுப்பப்பட்டவையே ஏனைய வாசகங்கள், 3-வது வாசகம் தொடக்கம் 30 வரையிலுள்ளவைகளை மூன்றாகப் பாகுபடுத்தலாம்

3—21 வரையிலானவை தனிநபர் உரிமைகளை வலியுறுத்துவனவாகவுள்ளது,

22—27 வரையிலாளவை பொருளாதார சமூக உரிமைகள்பற்றிக் கூறுகின்றது

28—30 வரையிலானவை சமூகத்தில் மனிதனுக்கு உரிமைகள் இருப்பதுபோல் கடமைகளும் உண்டு என்பதைக் கூறுகின்றது,

இவ்வாறாக மனித உரிமைகளைப்பாதுகாக்கும் பொருட்டு ஐ. நா. சபை வெளியிட்ட மனித உரிமைகளைப் பிரகடனம் ஒரு புதிய மனித வர்க்கத்தை உருவாக்கவேண்டும், என்ற நோக்குடனே வெளியிடப்பட்டபோதும் அதற்கான உண்மையான இலக்கை இன்றுவரை அடைய முடியவில்லை இதனால்தான் மனித உரிமைகள் பற்றிய போராட்டமானது இன்றும் மக்களால் தொடர்ந்து நடத்தப்படுகின்ற ஒரு போராட்டமாகவே காணப்படுகின்றது, எனவே மனித உரிமைகளுக்கான போராட்டம் என்பது தனியே அரசாங்கத்திற்கும், ஆளுனர்களுக்கும் மட்டும்தான் உரியது என்று நாம் எண்ணிவிடக் கூடாது. ஒவ்வொரு தனிமனிதனும்; ஒவ்வொரு மக்கள் தாபனங்களும் முழுமையாகப் பொறுப்பேற்று முன்னின்று நடத்திச்செல்ல வேண்டியபோராட்டமாகும்,

ஏனெனில் ஐ. நா, சபையின் மனித உரிமைப் பிரகடனத்தில் 1-வது வாசகத்தில் "மனிதர்கள் யாவரும் விடுதலையுடன் பிறந்தவர்களாயும் மதிப்பிலும், உரிமையிலும் சமமானவர்களாயுமுளர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் இன்று உலக நாடுகளின் பொருளாதார சமூகநிலையினை எடுத்து நோக்குவோமானால் 1-வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு முற்றும் முரணான ஓர் அமைப்பு முறையினையே காணக்கிடக்கின்றது, "மூன்றாம் உலகநாடுகள்," என்று குறிப்பிடப்படுகின்ற நாடுகள் யாவும் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும், உதாரணமாக ஆசி

# தொடர்ச்சியான போராட்டம்

யாவை எடுத்துக் கொண்டால் இங்கு வாழ்கின்ற 95 வீதமான மக்கள் இந்நாட்டின் 5% செல்வத்தை மட்டும் அனுபவிக்க, மிகுதியான 95% செல்வமும் முதலாளிவர்க்கத்தினரான 5% மக்களின் கைகளிலேயே தேங்கிக்கிடக்கின்றது, இத்தகைய ஏற்றத்தாழ்வின் காரணமாக 301 மில்லியனுக்கும்மேற்பட்ட மக்கள் போதிய ஊட்டச்சத்திகள் இன்றியும் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இல்லிடமின்றியும் அல்லல்படுகின்றனர், இவைமட்டுமன்றி வேலைவாய்ப்பின்மை, நிலமின்மை, போதிய தொழில் நுட்பப் பயிற்சியின்மை போன்ற குறைபாடுகளும் காணப்படுகின்றது, வறிய நாடுகளின் நிலை இவ்வாறு காணப்பட செல்வந்த நாடுகளான ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற நாடுகளின் நிலை வேறு விதமாக அமைந்து காணப்படுகின்றது, உலகின் மொத்த வளத்தில் (செல்வத்தில் $\frac{3}{4}$ பங்கினை இந்நாடுகளே தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்றன 98 வீதமான தொழில்நுட்ப அபிவிருத்தியும். ஆராய்ச்சியும் இந்நாடுகளில்தான் உண்டு, மிகுதியான 2% அபிவிருத்திதான் வறிய நாடுகளிடம் விடப்பட்டுள்ளதெனலாம்

இவ்வாருகக் கூறிக்கொண்டே போனுல் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்ட முடியும்! இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் பொருளாதார சமத்துவத்தை அடைவதற்கும் பெரும் தடைக்கல்லாகவே காணப்படுகின்றது!

இவ்வாருகப் பொருளாதார சமத்துவமின்மை காணப்படும் அதே வேளையில் குடிசார் அரசியல் உரிமைகள், சமூக பண்பாட்டு உரிமைகள் என்பன மறுக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது, இராணுவ ஆட்சிமுறை அதிகரித்துவரும் இன்றைய நிலையில் நிறுவன ரீதியாக (Institutional விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி அரசியல் கைதிகளைத் துன்புறுத்துகின்ற முறையும் அதிகரித்து வருகின்றது, இவற்றையெல்லாம் கொண்டு நோக்கும்போது சுருக்கக் கூறுவதானுல் இன்று மனித உரிமைகளை மறுக்காத நாடு ஒன்றே உலகில், இல்லை என்றுதான் கூறவேண்டும். மனித உரிமைகளுக்கான போராட்டம் தொடர்ந்தும் நடத்தப் படவேண்டும் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

★

---

## ஈழ நங்கையே, விழித்தெழு! விழித்தெழு!!

★ குடித்துவிட்டும், கோபத்துக்கு ஆளானபோதும் தங்கள் மனைவிமார்களை ஏசவும், அடிக்கவும், துன்புறுத்தவும் செய்கின்ற ஆண்கள் தங்கள் மனைவிமார்களும் மனித உயிர்கள் என்றுமதிக்கவும் அவர்களைப் புரிந்துகொண்டு ஒருவருக்கொருவர் நட்புடன் தம் கடமைகளைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்.

இது எங்களுடைய பெண்கள் எதிர்நோக்கும் சில பிரச்சனைகளும், அதற்குரிய தீர்வுகளுமாகும் - ஆனல் எம் நாட்டுப் பெண்களின் சமூக நிலையைப் பார்க்கும்போது ஒரு பூரண மனிதத்துவத்திற்கான போராட்டம் இன்னும் ஆரம்பமே ஆகவில்லை என்றுதான் கூறவேண்டும்.

விஞ்ஞான பூர்வமான தத்துவமும், இன்றைய கால கட்டத்துக்குத் தேவையான சரியான கொள்கையும் கொண்ட மாதர் இயக்கங்களைத் தெளிவாக உருவாக்கி சரியாகவும், இடைவிடாமலும் மாதர்களுக்குப் பிரச்சாரம் செய்யவேண்டும். விவசாயப் பெண்கள், தொழிலாளப் பெண்கள், உத்தியோகம் பார்க்கும் பெண்கள், நடுத்தர, அடித்தளக் குடும்பப் பெண்கள் எல்லாரையும் ஒன்றுபடுத்தி, அவர்களைப் பிரதிநிதிப்படுத்தும் மாதர் இயக்கங்களை உருவாக்க வேண்டும். வறுமையிலும், அறியாமையிலும் ஆழ்த்தி வைத்திருக்கும் சுரண்டலை எதிர்த்துப் போராடக்கூடிய மக்கள் சக்தி இவர்கள்தான்; நிலப்பிரபுத்துவம், கல்லாமை, வரதட்சணை, பெண்களை அடக்கும் சமூதாயப் பழக்க வழக்கங்கள் இவைகளை எதிர்த்துப் போராடக் கூடிய ஒரு 'தேசிய இயக்கம்' — இத்தகைய இயக்கமே எல்லாரையும் ஒன்று சேர்க்கமுடியும். இதிலே தான் எமது கடமையும் முழுமையான முயற்சியும் தங்கியுள்ளது. இதிலேதான் எமது வெற்றியும் மறைந்துள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சமத்துவத்தைப்பற்றிச் சட்டங்கள் இயற்றுவதால் மட்டும் சமத்துவம் வந்துவிடாது. ஒரு தொடர்ச்சியான செயற்பாடு அதுதான் இங்கே அவசியம். போராடப் போகும் மாதர்களுக்குச் சர்வதேச ரீதியிலான ஒரு மனிதாபிமானமுள்ள ஆதரவு தேவை. எனவே பெண்களின் சமூக விடுதலைக்கான போராட்டம் ஒரு பொது விடுதலைப் போராட்டமே அன்றி ஆண்களுக்கும் பெண்களுக்குமான பலப்பரீட்சை அல்ல என்பதை ஆண்களும் புரிந்து கொண்டு எமக்கு ஆதரவு நல்கட்டும்.

★



# “சுதந்திரம் எமது பிறப்புரிமை” யானால் தீண்டாமை என்பதற்குப் பொருள் ஏது? வரலாறுதான் ஏது?

இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே குறிப்பாக வடபகுதியில் நிலவி வரும் சாதி அமைப்பு முறைக்கு எதிராக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளுக்கான இயக்க பூர்வமான காலத்தை “சுமார் ஐம்பது ஆண்டு காலம்” என்று ஓரளவு குறிப்பிடலாம். இந்த ஐம்பது ஆண்டு காலத்திற்கு முன்னால் இதன் கோரரூபம் எப்படி இருந்திருக்குமென்பதனை இந்த ஐம்பது ஆண்டு காலக் குறிப்புகளைக்கொண்டு கணக்கெடுத்துக்கொள்வது யாருக்கும் கடினமாக இராது,

பரிணாம வளர்ச்சிக்கணக்கெடுப்பில் இருந்து பார்க்குமிடத்து நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பின் பிறப்போடு இந்தச் சாதி அமைப்பு முறையும் பிறப்பெடுத்ததென்று குறிப்பிடுவது பொருத்தமாயினும் இங்கு இந்தச் சாதி முறைக்கு எதிரான பொது இயக்கங்கள் பிறப்பிக்கப்பட்ட காலத்தைக் கொண்டுதான் இதன் வயது ஐம்பது ஆண்டுக்குக் கணக்கிடப்படுகின்றது.

தமிழ் மக்கள் தங்கள் பாரம்பரியப் பிரதேசம் என உரிமை கொண்டாடும் பிரதேசங்களுள் கேந்திரப் பிரதேசமாகக் கணிக்கப்படும் வடபிரதேசமெங்குமுள்ள கிராமப் பிரிவுகளுக்குச்சென்று உன்னித்து ஊடுருவிப் பார்த்தால் இந்தச் சாதி அமைப்பு முறையின் சின்னங்களைத் தரிசிக்க முடியும். கிராமங்களின் அமைப்புமுறையும்; ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளும், அவர்கள் வசிப்பிடங்களுக்குச் செல்லும் பாதைகளும், அவர்கள் வாழும் நிலங்களும், அவர்களைச் சுற்றியுள்ள பிரதேச நிலங்களின் நிலத்தோம்புப் பெயர்களும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பெரு ஆலயங்களும், குளங்களும், கிணறுகளும், மடங்களும் வேறு பல சரித்திரச் சின்னங்களும், கால்நடைகளின் பட்டிக் குறிகளும், வீதிப் பெயர்களும், கிராமப் பெயர்களும், பேச்சு முறைகளும், பழக்க வழக்கங்களும், நன்மை தின்மை வைபவங்களின் நடை முறைகளும் மிகவும் தீண்டப்படாதாருடன் தொடர்பு கொள்வதற்காக சங்கடப் படலையோடு கூடிய படலைத் தலைவாயிலும், அதற்குச்சற்று முன்வரிசையில் [உள்ள சாதியாருடன் பேசிக்கொள்வதற்காக அமைந்த] சவுக்குண்டியும், தம்மோடு ஒத்தவர்கள் மட்டும் உள்ளே வர வசதியாக அமைக்கப்பட்ட நால்சார் வீடுகளும், நடு முற்றமும் பாரம்பரிய பெருஞ்சாதி மனிதர்களின் சாதி அமைப்பு முறையினை அனுசரித்து அமைந்த ஞாபகச் சின்னங்களாக இருப்பதைத் தெளிவாக உணர முடியும்.

இந்தச் சாதி அமைப்பு முறைக்கும் அதன் வெறியாட்டங்களுக்கும் சவாலாக தலையெடுத்து வந்த எதிர்ப்புச் சாதனங்களுடன்தான் சாதி அமைப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதெனலாம்.

1915 — 18-ம் ஆண்டுக்கிடைப்பட்ட பகுதியில் சுன்னாகத்தைச்சேர்ந்த வி. எம். கந்தையா என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளியான ‘ஆதிதிராவிடன்’ என்ற மாத இதழுடன் இந்தச் சாதி எதிர்ப்பு இயக்கம் மெது மெதுவாக ஆரம்பிக்கப்பட்டது ஆயினும் இந்த ‘ஆதித்திராவிடன்’ அடிப்படையில் சமய சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டிருந்தமையால் சாதி எதிர்ப்பு இயக்கத்தில் இது பிரதானப்படுத்துமளவுக்குத் தலைநிமிர்ந்து நிற்கவில்லை. இதைத் தொடர்ந்து 1920 — 25 கால இடைவெளியில் சூ. எ. சின்னப்பு என்பவரை ஆசிரியராகக் கொண்ட “மேல் நோக்கம் என்ற பத்திரிகை’ ஒரு படி முன்னேறிச் சாதிக்கொடுமையின் தன்மைகளை ஆத்மார்த்தக் கருத்துகளோடு சேர்த்துக்கொண்டதும் அதே வேளை அச்சுத்தொழிலில் பயிற்சி பெற்று இன்றும் ஈழ கேசரிப் பொன்னையா என்று கௌரவமாக அழைக்கப்படும் பெரியார் முன்னேற்றம் பத்திரிகையை நெறிப்படுத்தியதும் குறிப்பிடக்கூடியனவாகும். இக்காலகட்டத்தில் தீவிரமான சாதி ஒழிப்பு இயக்கத்தில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டு துணிச்சலுக்கு இலக்கணமாய் விளங்கிய அமரர் யோவேல்போல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஜனதர்ம போதினி’ என்ற பத்திரிகையும் அப்பத்திரிகை மூலமாகப் போராட்டமயமான கருத்துகளுடன் ஆரம்பிக்கப்பட்ட ‘ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கமும்’ தான் ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றில் ஓர் அத்தியாயத் தொடக்கமாய் அமைந்தது எனலாம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் பட்டுவந்த இன்னல்களுக்கு எதிராக எழுந்து நின்று குரல் கொடுக்கும் பணியில் ஒப்புதல் தெரிவித்துக் கொண்டவர்களில் முக்கியமானவர்களாக இருந்தவர்களில் அன்று இராமநாதன் கல்லூரி ஆசிரியராக இருந்த உருத்திரகோடீஸ்வர ஐயர், மத்தியூஸ் பாதிரியார் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் லொக்கூட், பிக்னல் பாதிரியார் ஆகியோர் குறிப்பிடக்கூடியவர்களாவர். அவ்வேளை இந்துக்கல்லூரி ஆசிரியராகவிருந்த நெவின்ஸ் செல்லத்துரை அவர்களைத் தலைவராகவும் அமரர் யேக்கப் காந்தி அவர்களைச் செயலாளராகவும் கொண்டு உதயமாகிய ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கத்திற்கு மேற்குறிப்பிட்ட நால்வரும் போஷகர்களாக இருந்தமையிலிருந்து அன்று தொட்டு இன்றுவரை சாதி ஒழிப்புப்போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டும்தான் தன்னந்தனியாக நிற்கவில்லை என்பதும் காலத்திற்குக்காலம் நல்லெண்ணம் கொண்ட மக்கள் பலரும் ஒத்தாசை நல்கியுள்ளனர் என்பதும் புலனாகின்றது.

இந்தப் போஷகர்களில் மூவர் வெள்ளையர்கள் ஆதலால் அவர்கள் பிரதானப் படுத்தவில்லையாயினும் உருத்திர கோடீஸ்வர ஐயரைப் பொறுத்தவரை அவர் சாதித் தமிழர்களின் கண்டனங்களுக்கும், எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் இலக்காக வேண்டியதாயிற்று. இதேபோல் இந்த ஸ்தாபனத்தின் தலைமகனாகிய யோவேல்போல் எண்ணற்ற எதிர்ப்புகளுக்கும், பயமுறுத்தல்களுக்கும் முகங்கொடுத்துப் பெருமையைச் சம்பாதிக்கத் தவறவில்லை.

1927-ம் ஆண்டுக்கால கட்டத்தில் இலண்டனிலிருந்து தனது நண்பர் மூலமாக இலங்கைவாழ் மக்களின் பிரச்சினைகளை இலண்டன் குடியேற்ற நாடுகளின் பிரச்சினைகளை கவனிக்கவென நிறுவப்பட்ட சபைக்குத் தெரிவித்ததில் அமரர் யோவேல் போல் அவர்கள் எடுத்த முயற்சியின் பலாபலனே டொனமூரைத் தலைவராகக்கொண்டு இலங்கைக்கு வந்த அறுவர் அடங்கிய கமிஷனரும் "வயது வந்தோருக்கு வாக்குரிமையளித்தல்" என்ற கொள்கையின் கீழ் அன்று குடியேற்ற நாட்டுக் காரியதரிசியாக இருந்த அமெரி என்ற M. P. யினால் நியமிக்கப்பட்ட இந்த டொனமூர்க் கமிஷனுக்கு எதிர்ச் சாட்சியமளிக்க சேர், பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இலண்டன் மாநகரம் சென்றதிலிருந்துதான் "பஞ்சமச் சாதியிடம் வாக்குக் கேட்டு சாதிமான்கள் யாசகம் போவாரோ?" என்ற கேள்வி சாதி மான்களிடையே ஆக்ரோஷமாக எழுந்து சாதி அடக்கு முறைகள் கோரவடிவங்களை எடுத்தன என்பது மூக்கியகவனத்திற்குரியதாகும். பின்னர் இங்கே வந்த டொனமூர்க் கமிஷன் "வயது வந்தோருக்கு வாக்குரிமை கிடைப்பதன் மூலம் பல உரிமைகளை அவர்கள் அடைய வழிபிறக்குமென பிரகடனப்படுத்தியபோதும் உள்நாட்டு அரசு இயந்திரங்களைப்பெருஞ்சாதியினரே ஆளுகை நடத்தி வந்தமையால் ஒதுக்கப்பட்ட மக்களால் எதிர்பார்க்கப்பட்டவைகள் நடந்தேறவில்லை. பதிலுக்கு அடக்குமுறைகள் அதிகரித்தன, அரசு இயந்திரங்கள் தீவிரமடைந்தன விதானை, உடையார், மணியக்காரன் போன்ற பதவிகளில் குந்தியிருந்தவர்கள் காவல்படையினைச் சேர்ந்தவர்கள், சிவில் சேவை அதிகாரம் வகித்தவர்கள் உட்பட சகல பிரிவினரும் தேசவழமைச் சட்டத்தின் அடிப்படையில் துரிதகதியில் செயற்படத் தொடங்கினர், இவைகளைத் தாக்குப் பிடிக்க முடியாத ஒடுக்கப்பட்ட மக்கள் மதமாற்றம்போன்ற குறுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர், இதனால் ஒரு சிறிய அளவிலான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின என்பது உண்மையே.

அந்தக் காலத்து திண்ணைப் பள்ளிகளுக்குள் கூட அனுமதி கிடைக்கப்பெறாத மக்களுக்குப் பிறமதப் பாடசாலைகள் சற்று வழிவிட்டன, சுற்றுச்சார்புகளை மீறிப் பாடசாலைக்குச் சென்றபலர் தண்டிக்கப்பட்டனர், இம்சிக்கப்பட்டனர்,

பகிரங்க வீதிகளில் தலை நிமிர்ந்து நடமாடத் தடை, சுடலைகளில் பிணம் சுடத் தடை, பொதுஸ்தாபனங்கள் உள்நுழையத்தடை, மேளம் அடிக்கத் தடை, மீசைவிடத் தடை, கடுக்கன் அணியத் தடை, குளங்களில் குளிக்கத் தடை, பந்தல் போட்டு வெள்ளைகட்டத் தடை, முழங்கால் மட்டத்திற்குக் கீழ் வேட்டி அணியவும், மேல் அங்கி அணியவும் சால்வை போடவும் தடை, வண்டில் ஆசனத் தட்டில் ஏறியிருக்கத் தடை, புகை வண்டியின் ஆசனங்களில் பஸ் ஆசனங்களில் இருக்கத்தடை, கடைபோன்றவை வைக்கத் தடை, செய்த வேலைக்குக் கூலி கேட்கத் தடை, குழந்தைகளுக்கு நல்ல பெயரிடத்தடை, பால்மாடு வளர்க்கத் தடை, வீதுமர் அண்ணன்மார், காளி, பெரிய தம்பிரான், வீரபத்திரர், வைரவர், நாச்சிமார், காத்தவராயர் ஆகிய தெய்வங்களின் பெயர்களை விட ஏனைய பெயர்களில் கோவில் அமைக்கத் தடை, குடை பிடிக்கவும், வெள்ளைவேட்டி அணியவும், செருப்பு அணியவும்; பெண்கள் குடுமிபோட்டுக் கொள்ளவும் தடை, தாவணி போடத் தடை, தங்கத்தாலி நகைநட்டு அணியத்தடை; இப்படித் தடை வரிசையே கணக்கற்றனவு; இவையாவும் தேச வழமை என்ற மதிப்பீட்டுக்கு உட்பட்டவையாகவே கணிக்கப்பட்டன.

சர்வசனவாக்குரிமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் இராமநாதன் துரை அவர்கள் இலண்டன் சென்றிருந்தபோது அவரைத் தலைவராகக் கொண்டிருந்த சைவசித்தாந்த சபைக்குத் தற்காலிக தலைவராக ஆறுமுகநாவலரின் மருமகனான த. கைலாசபிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள், அப்போது பரமேஸ்வராக் கல்லூரியில் சைவசித்தாந்த அறக்கல்விப் போதனைக்காக மாநாடு ஒன்று நடாத்தப்பட்டது, அப்போது யோவேல்போல் அவர்களால் உந்தப்பட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டோர் சிலர், தாமும் சைவசித்தாந்த அறக்கல்வியைப் பெறவேண்டுமென்று கோரி மாநாட்டு மண்டபத்திற்குள் நுழைய முற்பட்டபோது "நிரந்தரத் தலைவர் இல்லாதபோது இதை அநுமதிக்க முடியாது" என மாநாட்டுத் தலைவர் கைலாயபிள்ளை மறுக்கவே அறக் கல்விக்கு அனுமதி கேட்டுப் போயிருந்த ஒடுக்கப்பட்டோர், அவரின் மறுப்பை எழுத்தில் பெற்று டொனமூர்க் கமிஷனுக்கு தந்தி மூலம் இலண்டனுக்கு அனுப்பிவைத்தனர், அந்த வேளையும் உயர்சாதியைச் சேர்ந்த நாகநாதி அதிகாரம், இலங்கைச்சட்டசபை உறுப்பினராக இலண்டனில் இருந்த தம்பி முத்து ஆகியோர் உயர்சாதி மக்களுக்கு ஆதரவாய் இருந்தனர், ஒதுக்கப்பட்டவர்கள் துணிந்து செயற்பட்டமையால்தான் இராமநாதன் துரை அவர்களின் இலண்டன் பிரயாணம் தோல்வியில் முடிந்ததெனலாம்,

1930-ம் ஆண்டு காலப் பகுதியில் ஹன்டி எச் பேரின்பநாயகத்தை தலைவராகவும் செனட்டர் நாகலிங்கம், ஒறேற்றர் சுப்பிரமணியம் கலைப்புலவர் நவரத்தினம், ஏ, எஸ். கனகரத்தினம் ஆகிய முக்கியஸ்தர்கள் உட்பட ஒடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய இளைஞர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் தோன்றியது,

இந்த ஸ்தாபனம் பல தேசியப் பிரச்சனைகளைக் கொண்டிருந்தபோதிலும் சாதி ஒழிப்பு விவகாரத்தில் பெருமளவு செயற்பட்டு "சம ஆசனம் சம போசனம்" என்ற கொள்கையை ஏற்று நாடெங்கும் பிரச்சாரங்களில் ஈடுபட்டது, அப்போது இவர்களுக்குச் சாதிமான்களால் கிடைத்த எதிர்ப்பு பெருமளவாகும் இதன் பிரசாரத்திற்கென தமிழக தமிழறிஞர் திரு. வி. க. அவர்கள் அழைக்கப்பட்டு சமபந்தி சம போசன பிரசாரத்தில்ஈடுபடுத்தப்பட்டது; அவர் திரும்பிப்போன மறுகணமே அவர் பேசிச் சென்றதும் சம ஆசனநடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதுமான பல பல பாடசாலைகள் தீயிட்டு எரிக்கப்பட்டன வசாவிளான், வடமூலை, ஒட்டகப்பலம், சுழிபுரம், புன்னாலைக் கட்டுவன் காங்கேயன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் [பாடசாலைகள் உட்பட] சுமார் 14 பாடசாலைகள் சாதிவெறியர் வைத்த தீயில் வெந்து சாம்பராகின,

1931-ல் வரவிருந்த ஆட்சி மன்றத் தேர்தலை தமிழர்களின் உரிமைக்காகப் பகிஷ்கரிக்கத் திட்டமிட்டுப் பிரசா

→ 10

# சிலி நாட்டு மனித உரிமைகள் பிரகடனம்

இன்றைய உலகில் மனிதன் கடமைகள் பற்றிய சர்வதேச கருத்தரங்கு சிலி நாட்டிலுள்ள சந்தியாக்கோ நகரில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் 28-ந் திகதி நடைபெற்றது, உலகின் பல பாகங்களிலுமுள்ள 200க்கு அதிகமான ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாகிய நாம் கலந்து கொண்ட இம் மாநாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலின் மூலமாகவும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமாகவும் எமக்கு ஏற்பட்ட தெளிவான கருத்துக்களுக்கும், தீர்மானங்களுக்கும் கைச்சாத்திடுகின்றோம்.

மனித உரிமைகள் சர்வதேசப் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையினால் 30 ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிடப்பட்ட போதிலும், எல்லா மக்களாலும், நாடுகளாலும் அடையப்படவேண்டிய ஒரு . குறிக்கோளாகவே காணப்படுகின்றது. உலகம் பூராக உண்மையான மனித இலட்சியங்களுக்காக உழைக்கும் ஒவ்வொருவருக்கும் மனித உரிமைப் பிரகடனமானது ஊன்று கோலாகவும் உறுதி தருவதாகவும் உள்ளது, எல்லா இனத்தினரும், மதத்தினரும், கொள்கையினரும் ஏற்கக் கூடிய மனித சமூகம் பற்றிய சில அடிப்படை உண்மைகளை இப்பிரகடனத்தில் வெளியிடப்பட்டுள்ளன, இந்த மாநாட்டில் எடுத்தியம்பப்பட்ட பல மேற்கோள்களுக்கும், தீர்மானங்களுக்கும் இது உதவியாக அமைந்திருக்கின்றது. எல்லா மனிதர்களுக்கும் பேச்சு, சுதந்திரம் தம் சொந்த நம்பிக்கை பற்றிய சுதந்திரம் அச்சமற்ற வாழ்வு என்பவற்றை எதிர்பார்த்திருக்கும் உலகில் மனித சமுகம் பற்றிய சிந்தனை வளர்ச்சியின் தொகுப்பே சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமாகப் பிரதிபலிக்கின்றது.

இக்காரணத்தையிட்டே கடந்த 30 வருடங்களாக மனிதன் இந்த உரிமைகளை அடைய வேண்டுமென்ற உணர்வையும், தன் நம்பிக்கையையும் ஆழமாக்கப்பட்டுள்ளதோடு பரவலாக்கப்படுவதற்கும் முயற்சித்துள்ளது, .

கடந்த 30 ஆண்டுகளாக இப் பிரகடனத்தின் மூலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் இதன் குறிக்கோள் இன்னுமே அடையப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது. இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றியதன்மூலம் எமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பூரண மனித்துவ நிலையையடைய முக்கிய இடையூறாக அமைகின்ற கசப்பான உண்மைகள் சிலவற்றை உணரத் தொடங்கியிருக்கின்றோம் இவற்றுள் குறிப்பாக

— ஐ. நா' சபைக்குச் சார்ந்த பல அங்கத்துவ நாடுகளில் மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு நேர் முரணான நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மீறுதல்கள் நடைபெறுகின்றன பல அரசுகள் மனிதனின் மதிப்பீட்டைக் குறைக்கும் அமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளன, இவ்வாறான திட்டமிடப்பட்ட பலாத்காரச் செயல்களையும் சித்திரவதைகளையும் அரசின் பாதுகாப்பு என்ற போர்வையில் நியாயப் படுத்தப்பார்க்கின்றன,

— பலநாடுகளில் ஆட்சியாளர் தம் கொள்கையினாலும், கையாளுகின்ற வழிவகைகளினாலும் தம் குடி மக்களை நண்பர்கள் எதிரிகள் என்றும், வெற்றி பெற்றோர், தோல்வியுற்றோர் எனவும்' பிரித்து ஒரு போராட்ட மன நிலையை ஏற்படுத்தி எதிரிகளை ஒழித்துச் செல்லும் நிலைக்கு இட்டுச் சென்றனர்

— இந்நாடுகள் அதிகமாக அந்நாட்டு மக்களின் அடிப்படை நன்மைகளுக்கு எதிர்மாறான செயல்முறைகளைக் கையாளும் தேசிய சர்வதேச பொருளாதாரக் குழுவினரால் ஆதரவளிக்கப்படுகின்றன.

— இந்நாடுகள் சட்ட ஒழுக்கக்கொள்கைகளை இறுக்கமான அடக்குமுறைச் சித்தாத்தங்களால் அமுக்கி அடக்குகின்றன. இந்நாடுகளில் இரகசியப் பாதுகாப்பாளர்களாலும், உளவறியும் ஸ்தாபனங்களும் எந்த வகையான சட்ட வரையறைக்கும் உட்படாதவர்களாக மனித உடல் நல சேமத்திற்கும், மனித உயிர்ப்பாதுகாப்பிற்கும் எதிரான மித மிஞ்சிய மிகக் கொடூரமான செயலாற்றங்களில் ஈடுபட்டு வருவதால் இது மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்துகின்றன,

— மனிதாபிமானமற்ற பயங்கரவாதச் செயல்களை அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்ந்து விடுவதால் மனித பாதுகாப்பும், சட்ட ரீதியான சமூகத்தின் பாதுகாப்பும் சீர்குலைக்கப்படுகின்றன.

— இவையெல்லாம் மாறி மாறி; வரும் பலாத்காரம், எதிர்ப்பலாத்காரம் என்ற நச்சுவட்டத்தை உருவாக்கி மானிட வர்க்கத்தின் சமூக ஒழுங்கமைப்பைச் சிதறச் செய்கின்றன,

— பகுத்தறிவுக்கு முரணான வகையில் சிறிய நாடுகளும் பெரிய நாடுகளும் ஆயுதங்களாகச் செலவிடும் பணத்தொகையும், உலகில் பெருமளவு காணப்படும் வறுமையும் அவல நிலையும் மீளப்பெறமுடியாத மூலவளங்களின் தேவையற்ற பயன்பாடும் உலக சமாதானத்திற்குப் பெருந்தடையாக அமைந்துள்ளது.

— மனித உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாததாகவும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகவும் காணப்படுகின்றது,

மனிதன் தன்னுடைய குடி உரிமைகளையும் அரசியல் பொருளாதார சமூக கலாச்சார உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய நிலைகளை உருவாக்கினால் தான் மனிதன் நீதியையும் சுதந்திரத்தையும், அனுபவிக்க முடியும், குடி உரிமைகளுக்கும் அரசியல் சுதந்திரங்களுக்கும் மதிப்புக் காட்டாதவிடத்து அது மனிதனின் உரிமைக்கும், மதிப்பிற்கும் எதிரானது மாத்திரமல்ல அபிவிருத்திக்கும் பெரும் தடையாக அமைகின்றதெனலாம். இவ்வகையாகத்தான் சமூக, கலாச்சார உரிமைகளுக்குக் கொடுக்கப்

படுகின்ற பரா கண்டிதம் குடிசார் அரசியல் உரிமைகளையும் பெறமுடியாததொன்றாக்கி விடுகின்றது?

அநேக நாடுகளில் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் போதிய உணவின்றியும், கல்வி வசதியின்றியும் வேலை வாய்ப்பின்றியும் வைத்திய வசதிகள் இன்றியும் துயருறுகின்றனர். அத்தோடு இப் பெரும் பகுதி மக்கள் பிழைப்புமட்ட நிலையிலும் வாழ்கின்றனர் என்ற உண்மை மனித உரிமைகள் பரவலாகவும் வெளிப்படையாகவும் மறுக்கப்படுவதையே எடுத்துக் காட்டுகின்றது. இது இன்று நிலவுகின்ற சர்வ தேசப் பொருளாதார அமைப்போடு நேரடித் தொடர்பு கொண்டது "புதியதொரு சர்வதேச பொருளாதார நிலை உருவாக்கப்பட்டு அது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஒரு புதிய மனித சமூக அமைப்பினுல் பூரணமாக்கப்படுவது மனித உரிமைகளினதும் அடிப்படைச் சுதந்திரத்தினதும் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமாக உணரப்பட வேண்டியதொன்றாகும்"

இந்த வேண்டுகோளின் பின்னணியில் இறைவன் நம்பிக்கையுள்ள ஆண்களும் பெண்களும் தங்கள் இறை நம்பிக்கையில் ஊன்றப்பட்டவர்களாய் எல்லா நாடுகளிலும், தேசங்களிலும் புதியதோர் ஒற்றுமையைக் காண வேண்டுமென்ற துணிவோடு பொதுச் செயல்களிலும், பிரார்த்தனைகளிலும் ஈடுபட வேண்டுமென ஊக்குவிக்கின்றோம்,

— எல்லா ஆண்களும் பெண்களும் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் நிலை நிறுத்தவும் மற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை துணிவுடன் நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் கேட்டுக்கொள்ளுகின்றோம்

— எல்லா அரசாங்கங்களையும் தங்கள் அதிகாரங்களை மனித உரிமைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்தும் படியும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களை நிறைவேற்றும் படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

அமைதி நீதியின் மேல் கட்டிவளர்க்கப்பட வேண்டிய தொன்றாகும் என்பதனால் மக்களின் மனச்சாட்சியை தட்டி எழுப்ப விழைகிறோம்;

★ ★ ★

இந்த மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட அதே உண்மைகளை மனித உரிமைகள் தினத்தில் (டிசம்பர் 9-ல்) உங்கள் முன்வைக்க விரும்புகின்றோம். — நம் பகுதிகளில் நடைபெற்ற நடைபெறப் போகின்ற மனித உரிமைகள் மீதான மீறுதல்கள் தனிப்பட்ட ஒரு நாட்டில் மட்டும் நடைபெறுகின்ற சம்பவங்களாக அல்லாமல் உலகில் பல நாடுகளில் மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளின் ஓர் அம்சமாக நோக்கி அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலுள்ள எல்லா மக்களோடும் தோளோடு தோள் நின்று உழைப்போம் என்ற உறுதி பூணுங்கள்.

— மனித உரிமைகள் சாசனத்தை வாசித்துப்படித்து அதை அன்றாட வாழ்க்கையில் செயற்படுத்துங்கள்.

— மனித உரிமைகள் மீறல் பற்றிய தகவல்கள் உங்களுக்குக் கிடைக்கும்போது பொறுப்புள்ள தலைவர்களுக்கு அறிவியுங்கள் மனித உரிமைப் போராட்டங்களில் பங்கு கொள்ளுங்கள்

— எங்கள் கிராமங்களில் மனித மகத்துவத்திற்கு (சாதி மத, இன வித்தியாசங்களுக்கு) எதிராக மூடப்பட்டுள்ள அத்தனை கதவுகளையும் திறவுங்கள்.

— சிக்கன வாழ்வையும் சேமிப்பையும் பெருக்குவோம் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து எமது உள்நாட்டுப் பொருட்களையே பெருமளவு பயன்படுத்துங்கள்.

— புகைத்தல் குடிப்பழக்கங்களை முற்றாக ஒழியுங்கள்

— உணவுத் தேவையில் தன்னிறைவு அடைய உங்கள் வீடுகளில் சிறுதோட்டம் கால்நடை வளர்ப்பு என்பவற்றை ஊக்குவியுங்கள்,

— பணப்பயிர்களை மட்டுமல்லாது நம்மக்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை உருவாக்கி எமக்கே சொந்தமாக்கப் படுத்துங்கள்.

— நம் நாட்டில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், மூலப் பொருட்களை அழியாது பாதுகாக்கவும் சிறு கைத்தொழில்களையும், குடிசைக் கைத்தொழில்களையும் ஊக்குவியுங்கள்.

— தொழிலாளர்கள் நேர்மையான தொழிற் சங்கங்களில் சேர்ந்து அச்சங்கங்களை வளர்க்கப் பாடுபடுங்கள்.

— வர்த்தகர்களின் அநியாய விலை, சுரண்டல் என்பவற்றை முறியடிக்க நேர்மையான நுகர்ச்சிச் சங்கங்களில் சேர்ந்து ஊக்குவியுங்கள்,

— உரிமைகளைப் பாதுகாக்க விவசாயிகளும், கடற்தொழிலாளிகளும் நேர்மையான சங்கங்களில் சேர்ந்து உழையுங்கள்.

## நானும் மனிதன்?

"அவர்கள் அரச காவலர்கள்
அரக்கர்கள், அநீதியாளர், ஆக்கிரமிப்பாளர்கள் என
அவர்களைச் சிலர் வருணிப்பார்கள்தான் — ஆனால்
அதுபற்றி நான் அக்கறைப்படவில்லை.

அன்றொருநாள் அயலவனைக் கைதாக்கினர் —
அடியேன் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை;
பின்பொருநாள் முன்வீட்டானைப் பிடித்துச்
சென்றனர் —
ஏன் என்றும் எதிர்க்கேள்வியான் எழுப்பவில்லை.
இன்றுவந்து என்னை அவர்கள் இழுத்துச்சென்ற
போது
எதிர்ப்பதற்கோ எவரேனும் இருக்கவில்லை;"

மூலம் செல்வி தமிழ்வடிவம் —ஜெயந்தன்—

# எங்கள் கோரிக்கைகள்

1979-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் திகதி ஞாயிறு பிற்பகல் நல்லூர் கல்யாண மண்டபத்தில் ஒன்று கூடிய ஜனத்திரள் பின்வரும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

1, நாம் பயங்கரவாதிகள் தடைச்சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தினையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் நீக்கும்படியும்,

2. அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இறை பிடிக்கப்பட்ட எல்லோரும் உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் எனவும்,

3; [illegible] தணிக்கை நீக்கப்படல்வேண்டும் எனவும்

4. அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டம் இலங்கையிலுள்ள தொழிலாளரின் ஜனநாயக உரிமைகளை நசுக்குவதால் அதை நீக்குமாறும்.

5. சமூகக் குறைபாடுகள் நீக்கச் சட்டத்தை தீவின் சகல பகுதிகளிலும் சரிவர அமுல்நடத்தும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவதுடன் சகல மட்டங்களிலுமுள்ள எல்லா மக்களின் மனித உரிமைகளை அங்கீகரித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும்.

6, இலங்கை அரசியல் அமைப்பின் 1-ம் பிரிவிற்கு முரணாக மக்கள் சித்திரவதை செய்யப்படுவதைக் கண்டிப்பதுடன் இதற்குப் பொறுப்பான எவரையும் நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்;

எனவும் கோருகிறோம்.

---

சுதந்திரம் எமது பிறப்புரிமை

ரம் செய்து வந்த வாலிபர் காங்கிரஸார் அவ்வேளை சாதி வெறியர்களின் கோபாக்கினிக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று இந்தக் காலகட்டத்தோடு வீறு கொண்டு எழுந்து நின்ற சாதி வெறியர்கள் கிராமப் புறங்கள் எங்கும் தங்கள் தாக்குதலை மேற்கொண்டனர்: அத்தாக்குதல்களுக்கு முதல் முதலில் பலியிடப்பட்டவன் புத்தூர்ப் பகுதியைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டவர்களில் ஒருவனாகும்; பீதி மிகுதியால் பனைமரத்தில் ஏறியிருந்த அந்த அப்பாவிப் பஞ்சமன் மரம் தறித்து வீழ்த்தப்பட்டு, கொல்லப்பட்டு அந்தப் பனைமரத்தின் அடியிலேயே கொழுந்திப் பிடி சாம்பராக்கப்பட்டான். ஏனைய கிராமப் புறங்களில் இல்லாத அளவில் புத்தூர்ப்பகுதியில் நில ஆதிக்க முறையும் சாதி ஒடுக்குமுறையும் மேலோங்கி இருந்தன என்பதற்கு இன்று அழியா அடையாளச் சின்னங்கள் பல உண்டு. பல பாரம்பரிய குடும்பங்களின் பழைய நாற்சார் வீடுகளில் இன்று வரை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. பல்லக்குகளும் வீட்டு முற்றங்களின் நீள் வரிசைகளில் சுற்று வட்டாரத்தில் உண்டாக்கப்பட்ட பல அளவு கொண்ட பொருக்குப் பட்டையற்ற நேர்மரங்களும் இன்றைய அமைப்புக்குச் சற்று வேறுபட்ட சற்று உயர்ந்த அமைப்பிலுள்ள சார்க்கலப்பைகள் இடம்பெற்றுள்ளதும் இன்றும் நாம் பார்க்கக்கூடிய சின்னங்களாகும் அக்காலத்தில் பல்லக்கு முதலி குடும்பம் எனப்படுவோர் தங்கள் பிரயாணத்திற்கு பயன்படுத்திய பல்லக்குகளைச் சுமந்துசெல்ல கோவியர் சமூகத்தினரை அமர்த்தி வைத்துக்கொண்டிருந்ததையும் ஊரிலுள்ள பஞ்சமர்களிடையே ஏற்பட்ட குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்க அளவான மரத்தைப் பார்த்து அவர்களைக் கைகொடுக்க வைத்து சவுக்கடி கொடுத்த தர்பார்த்தன வழக்கத்தையும் மாட்டுக்குப் பதிலாக அடிமை மனிதனை ஏரில் பூட்டி உழுதுபலியிட்டமையையும் இந்த அடையாளச் சின்னங்கள் இன்னும் நினைவு படுத்திக் கொண்டிருக்கின்றன. ★



பிந்திய செய்தி

## நால்வர் கைது

மனித உரிமைகள் தின சுவரொட்டிகள் ஒட்டியதற்காக நான்கு இளைஞர்கள் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டார்கள்,

திரு, இளங்கோவன், திரு. இரத்தினம், திரு. சலீம் திரு. பாலன் ஆகியோரே கைது செய்யப்பட்ட இளைஞர்களாவர்.

இது தொடர்பாக திரு. இக்பாலை கைது செய்ய வீடு சென்ற பொலிசார் அவர் அங்கு இல்லாததால் அவரது சகோதரனைக் கைதுசெய்ய எடுத்த முயற்சி குடும்பத்தினரதும், அயலவரினதும் கூட்டு முயற்சியால் தடுக்கப்பட்டது.

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு. அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள செல் பிலேசமின் அச்சகத்தில் அச்சிட்டு 9-12-79-ல் வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G. P. O; Under no Q. B· 8935/78,